பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 11 புதன்கிழமை 24.03.2021 கதிர் 07

## உணவகத்தில் தீ; ஊழியர் மரணம்!

கொழும்பு 13, பஞ்சிகாவத்தை, சங்கராஜா மாவத்தையில் அமைந்துள்ள உணவகமொன்றில் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்து இன்று அதிகாலை ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தால் உணவகத்தின் 45 வயது ஊழியர் ஒருவர் உயிரிழந்தார்.

☞ 2

### இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின்

## பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்

### ஐ.நாவிடம் சம்பந்தன் கோரிக்கை

இலங்கை மீது பிரேரணையைக் கொண்டுவந்த நாடுகளும், ஐ.நா. மனித உரிமைகள் சபையும், பிரேரணை தீர்மானமாக நிறைவேற அதை ஆதரித்த நாடுகளும் ஒன்றுசேர்ந்து – ஒன்றுகூடி தீர்மானத்தின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான

☞ 2



## இந்தியா நடுநிலை வகித்தாலும் தீர்வு விடயத்தில் அதிக அக்கறை

### சம்பந்தன் சுட்டிக்காட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலைவகித்தாலும்கூட தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு விடயத்தில் அதிக சிரத்தை கொண்டு செயற்படுகின்றது.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 46 ஆவது அமர்வில் பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் இலங்கைக்கு எதிராக முன்

☞ 2

# யாழ். மேயர் மணிக்குக் கொரோனா!

### நெல்லியடியில் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட தொற்றாளர் மூலம் பரவல்





**(ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம்,மார்ச்24**

**யாழ். மாநகர சபை மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்குக் கொரோனா வைரஸ் தொற்று இன்று உறுதி செய்யப்பட்டது.**

**இன்று காலை முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டது.**

☞ 2

## மன்னார் கரிசல் காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம்!





**(ந.லோகதயாளன்)**

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, கரிசல் காட்டுப் பகுதியில் நேற்று மாலை உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கரிசல் ரயில் பாதைக்கு சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள காட்டுப்பகுதியில் குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

☞ 2

## தென்னை மரம் தலையில் வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபச் சாவு

**(ந.லோகதயாளன்)**

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளைப் பகுதியில் பனை மரம் தறித்தபோது தென்னை மரம் தலையில் வீழ்ந்தமையால் மரத்தைத் தறித்தவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

முள்ளியவளை, ஐயனார் குடியிருப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜெயசீலன் (வயது 42) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

பனை மரம் தறித்தவேளையில் பனையின் அருகே பட்ட நிலையிலான தென்னை மரம் ஒன்றும் நின்றுள்ளது. பனை விழும் வேளை தென்னை மரத்திலும் தாக்கியதால் அதுவும் முறிந்து விழுந்துள்ளது.

இவ்வாறு முறிந்து வீழ்ந்த தென்னை

☞ 2

## இலங்கைக்கு ஐ.நாவில் அபகீர்த்தி: பொருளாதாரத்தடையும் வரக்கூடும்

### சஜித் அணி எச்சரிக்கை



சர்வதேச நாடுகளுடன் இலங்கை அரசு கொண்டிருந்த முரண்பாடான கொள்கையே ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்படக் காரணமாக அமைந்துள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்லவே

☞ 2

## எதேச்சாதிகார அட்டூழியங்களை மறைக்கவே 11 நாடுகள் எதிர்ப்பு

### முன்னாள் அமைச்சர் மங்கள 'டுவிட்'

தமது சொந்த எதேச்சாதிகாரங்களால் நடந்த அட்டூழியங்களை மறைப்பதற்காகவே 11 நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு 'இல்லை' என வாக்களித்துள்ளன என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானம் குறித்து டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் இணை அனுசரணையில் இலங்கை 2015 ஆம் ஆண்டு அதன் சொந்த நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் பொறி

☞ 2

## மேலும் 24 பேருக்கு யாழில் கொரோனா!

**(ந.லோகதயாளன்)**

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்று தொடர்ந்தும் எகிறியிருப்பதாக பி.சி.ஆர். பரிசோதனைகள் தெரிவிக்கின்றபோதும் சுகாதாரத் துறையின் செயல்பாடுகள் இன்னும் உாரடையவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

☞ 2

## தீர்மானத்துக்கு அஞ்சமாட்டோம்

### எஸ்.பி. சூளுரை

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அஞ்சமாட்டோம். அதனை நிராகரிக்கின்றோம். மேற்படி தீர்மானத்தின் பிரகாரம் இலங்கைக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது.

☞ 2

## யாழ். மேயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். மேயர் மணிவண்ணன் கருத்துத் தெரிவிக்கையில்–

கடந்த 20ஆம் திகதி நெல்லியடியில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகிய ஒருவர் கலந்துகொண்ட திருமண வைபவம் ஒன்றில் நானும் கலந்துகொண்டமையால் நான் என்னை உடனடியாக சுயதனிமைப்படுத்திக்கொண்டமையோடு பி.சி.ஆர். பரிசோதனையும் செய்துகொண்டேன். இதன்போது எனக்கு கொரோனாத் தொற்று உறுதியானது.

என்னோடு இக்காலப் பகுதியில் தொடர்புகொண்ட நபர்களை அவதானமாக இருக்குமாறு கேட்டுகொள்கின்றேன்.

இன்று மாலை நடைபெறவிருந்த யாழ். மாநகர சபையின் விசேட கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன் – என்றார்.

## இந்தியா நடுநிலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மான விவகாரத்தில் இந்தியா நடுநிலை வகித்தாலும் கூட அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் ஒரு தெளிவான அறிக்கையை அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமத்துவத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில், கௌரவத்தின் அடிப்படையில் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற கருத்தை இந்திய மத்திய அரசு வலியுறுத்தியிருக்கின்றது.

இதை நிறைவேற்றுவதற்கு இந்தியா இயன்ற அத்தனை முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்தக் கருமத்தில் எங்களுடைய ஒத்துழைப்பும் பரிபூரணமாக இருக்கும் – என்றார்.

## பரிந்துரைகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன்.ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது அமர்வில் பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானமே நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் இரா.சம்பந்தன் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது போன்ற கருமங்களை இலங்கை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்விதமான கருமங்கள் நடைபெற வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். எமது முழுமையான ஒத்துழைப்புகளையும் வழங்குவோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 22 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியுள்ள இந்தத் தீர்மானம் ஒரு நல்ல தீர்மானம். இதை நாங்கள் வரவேற்கின்றோம்.

தீர்மானத்திலுள்ள பரிந்துரைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதுதான் முக்கியம்.

பிரேரணையைக் கொண்டுவந்த நாடுகளும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும், பிரேரணை தீர்மானமாக நிறைவேற அதை ஆதரித்த நாடுகளும் ஒன்றுசேர்ந்து – ஒன்றுகூடி தீர்மானத்தின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் – என்றார்.

## உணவகத்தில் தீ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஐந்து தீயணைப்பு வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

## மன்னார் கரிசல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாடு தேடிச் சென்ற நபர் ஒருவர் நேற்று மாலை சடலத்தை அவதானித்த நிலையில் அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த மன்னார் பொலிஸார் சடலத்தை அவதானித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சடலம் சிதைவடைந்து உருக்குலைந்துள்ளதால் அடையாளம் காண முடியாத நிலையில் உள்ளது.

இன்று காலை சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் மற்றும் மன்னார் பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலத்துக்கு அருகில் பாதணியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தென்னை மரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரம் மரத்தைத் தறித்தவரின் தலையைப் பலமாகத் தாக்கியதால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சடலம் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மேலும் 24 பேருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றைய தினம் நகர சந்தையில் 9பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டதனால் இன்றும் பலரிடம்பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு பெறப்பட்ட மாதிரிகளில் 24 பேரிற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த 24 பேரும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்டவர்கள் எனவும் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து இன்று மாலை சுகாதாரத் திணைக்களத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

# வங்கிக்கணக்குகளை ஹக் செய்து பணமோசடியில் ஈடுபட்ட நபர் கைது!

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் கறுப்புப் பண மோசடி குற்றச்சாட்டில் 29 வயதான இளைஞர் ஒருவர் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரின் தனியார் வங்கி கணக்கில் ரூ. 172 லட்சம் ரூபா அமெரிக்காவிலிருந்து வைப்பிலிடப்பட்டுள்ளது எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் வசிக்கும் பல்வேறு நபர்களின் கணக்குகளை ஹக் செய்வதன் மூலம் பணம் இவ்வாறு குறித்த நபரின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் சந்தேகநபரின் பெயரில் 14 கோடி ரூபா பல வங்கிக் கணக்குகளில் வைப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில், 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் கறுப்புப் பண மோசடியில் ஈடுபட்ட 36 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கறுப்புப் பணமோசடியுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவு முன்னெடுத்து வருகின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு ஐ.நாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசு, இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டு வராதவாறு சர்வதேச நாடுகளுடன் நற்புடன் நடந்துகொண்டபோதும், தற்போதைய அரசு சில நாடுகளுடன் மாத்திரம் கைகோர்த்துக்கொண்டு மற்றைய நாடுகளுடன் முரண்பாடான கொள்கைகளையே பின்பற்றுகின்றது.

இதனால் ஜெனிவாவில் இலங்கை நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு அபகீர்த்தியானது.

ஐரோப்பிய நாடுகளினால் பொருளாதாரத் தடைக்கு உள்ளாகும் நிலையும் ஏற்படக் கூடும் – என்றார்.

## தீர்மானத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைக்கு எதிராக பிரிட்டன், ஜேர்மன் உள்ளிட்ட நாடுகளே தீர்மானம் கொண்டுவந்தன. அதில் ஒரு நாட்டைத் தவிர ஏனையவை நேட்டோ நாடுகளாகும். இந்த நாடுகளே அரபு வசந்தம் என்ற போர்வையில் ஈராக், லிபியா, சிரியா, ஆப்கானிஸ்தான், ஜேர்மன் ஆகிய நாடுகளில் அழிவை ஏற்படுத்தின, ஏற்படுத்தியும் வருகின்றன. ஜேர்மனில் இன்று நடத்தப்படும் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் பிரிட்டன் மற்றும் ஜேர்மன் நாட்டுக்குரியவையாகும்.

இவ்வாறு உலகில் இடம்பெறும் பாரிய போர்க்குற்றங்களுடன் தொடர்புடைய நாடுகளே இலங்கைக்கு எதிராக தீர்மானம் முன்வைத்தன. இந்தத் தீர்மானம் சட்டவிரோதமாகும்.

இலங்கையில் நடைபெற்ற போர் இரு நாடுகளுக்கிடையிலான போர் கிடையாது. எனவே, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மட்டுமே இதனுடன் தொடர்புபடும். அந்தவகையில் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குக் கிடையாது. எமது நாட்டின் அரசமைப்பையும் விமர்சிக்க முடியாது. ஆக மனித உரிமைகள் என்ற போர்வையில் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தவறு – சட்டவிரோதமாகும். எமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் போலியானவை. வடக்கில் போராட்டம் நடத்துபவர்களுக்கும் இது தெரியும்.

இறுதிப் போரின்போது மக்கள் மீது விடுதலைப்புலிகளே தாக்குதல் நடத்தினர். படையினரிடம் சரணடைய வந்தவர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறு சரணடைய வந்த ஒருவரே பிரபாகரனின் இருப்பிடத்தைக் காண்பித்தார். எனவே, எமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் போலியானவையாகும். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் எதுவும் நடக்கப்போவதில்லை. அதற்கு அஞ்சமாட்டோம். தீர்மானத்தை அடியோடு நிராகரிக்கின்றோம் – என்றார்.

## எதேச்சாதிகார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையை முன்மொழிந்தபோது, சீனா, ரஷ்யா உட்பட முழு உலகமும் இலங்கையுடன் இருந்தன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்போது இலங்கைக்கு 11 நண்பர்களே உள்ளனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவுக்கு வெற்றி இது!

வழக்கமாக ஒரு மோதலில் அல்லது முரண்பாட்டில் அதில் நேரடியாக சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளில் ஒன்று வெல்லும். அல்லது பிணக்கு வெற்றி தோல்வியின்றி முடியும். அல்லது வெற்றி தோல்வி தள்ளிப்போகும்.

அதற்கு மாறாக, மோதலில் சம்பந்தப்படாத தரப்பு வெற்றியீட்டுவதாக நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? அப்படி ஒன்றுதான் இப்போது ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நடந்தேறியிருக்கின்றது.

இலங்கையில், அரசுப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் முடிவடைந்து பன்னிரண்டு ஆண்டுகளாகின்றன.

யுத்த காலத்தில் அங்கு நடந்தேறிய அடிப்படை மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் குறித்து நீதி முறையான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் மார்க்கம் குறித்து இப்போது ஜெனிவாவில் சில்லெடுப்பு நடக்கின்றது.

யுத்த கால அத்துமீறல்கள் குறித்து சர்வதேச நியமங்களுக்கு உட்படக் கூடிய விசாரணைப் பொறிமுறையை உருவாக்க மறுக்கும் இலங்கை அரசு ஒருபக்கமாகவும் –

ஏதேனும் அழுத்தம் கொடுத்தாயினும் இந்த விடயங்களை ஒப்பேற்றி விட வேண்டும் என்று துடிக்கும் மேற்குலம் மறுக்கமாகவும் –

கன்னை கட்டிப் பிரிந்து, இராஜதந்திரப் போர் நடத்தியமையைக் கண்டோம்.

இந்தப் போரில் மேற்குலகுக்கு இன்றைய நிலையில் ஒரு சிறிய இராஜதந்திர சாதக நிலைமை தென்பட்டாலும் அது வெற்றியாகக் கொள்ளத்தக்க ஒன்றல்ல.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகத் தாம் முன்நகர்த்திய பிரேரணையை 22 இற்கு 11 என்ற அடிப்படையில் வெல்ல வைத்தமையால் இது குறித்து மேற்குலகம் மகிழலாம். ஆனால், இது மேற்குலகுக்கு இராஜதந்திர வெற்றியல்ல. ஒரு சாதக நிலைமை மட்டுமே.

இலங்கையின் யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் உள்ளடங்கியதான மீறல்களை விசாரணை செய்வதற்கு, சர்வதேச நியமங்களுக்குப் பொருத்தமான ஒரு விசாரணை பொறிமுறையை ஸ்தாபித்து, அதனை முற்கொண்டு நகர்த்திச் செயற்படுத்தினால்தான் மட்டுமே அதனை ஒரு இராஜதந்திர வெற்றியாக மேற்குலகு கொள்ள முடியும்.

அதேசமயம், இலங்கைக்கு எதிரான – இலங்கை ஆட்சேபிக்கின்ற – தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் மேற்குலகு நிறைவேற்றியிருக்கின்றமை இலங்கைக்குப் பின்னடைவே.

அதேவேளை, தற்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம், இந்த யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் முழுத் திருப்தி தருவதாக அமையவில்லை என்பது கண்கூடு.

ஆக, நேற்று ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக ஒரு பிரேரணை வெற்றிகரமாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டாலும் கூட, அதை ஒரு வெற்றியாக அந்தப் பிரேரணையைக் கொண்டு வந்த சர்வதேச நாடுகளும் சரி, அதை எதிர்த்த இலங்கை அரசும் சரி, அவ் விடயத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட – பாதிக்கப்பட்ட – தரப்பான தமிழர்களும் சரி, கருத முடியாது என்பதுதான் நிலைமை.

ஆனால், இந்தப் பிரச்சினையில், அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது அதில் கலந்து கொள்ளாமல் மதில் மேல் பூனையாக ஒளித்துப் பிடித்து விளையாடிய இந்திய இராஜதந்திரத்துக்கோ இது பெருவெற்றி.

அதைத்தான், இந்தப் பிணக்கில் சம்பந்தப்படாத தரப்புக்கு பிணக்குப் பற்றிய சர்ச்சையில் வெற்றி என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டோம்.

இவ்விடயத்தில் இந்தியாவின் செயற்பாட்டை இலங்கை அரசும் பாராட்டுகின்றது. நன்றி கூறுகின்றது.

மறுபக்கத்தில் நிற்கும் தமிழர்களின் தலைமையும் இந்திய நடவடிக்கையை மெச்சி, வரவேற்று, சிலாகித்து, நன்றி கூறுகின்றது.

இவ்வளவுக்கும் இந்தியா மேற்படி தீர்மானம் தொடர்பாக ஜெனிவாவில் நடந்த வாக்கெடுப்பில் பங்கெடுக்கவில்லை. தனது ஜெனிவாப் பிரதிநிதி மூலம் ஒரு சுருக்க உரையை அறிக்கையாக சமர்ப்பித்து விட்டு இந்தியா அமைந்து விட்டது.

அந்த அறிக்கையை ஒரு புறம் தமிழர் பிரதிநிதிகள் பாராட்டுகின்றார்கள். மறுபுறம் கொழும்பும் விதந்துரைக்கின்றது.

இந்த ஜெனிவா வாக்கெடுப்பில் இலங்கை பக்கத்தில் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் எல்லாம் அணி வகுத்து நின்றன. இலங்கை பக்கம் நிற்கின்றன. அத்தகைய சூழ்நிலையில் அதே அணியின் சிந்தனைக் கோட்டில் இந்திய இராஜதந்திரம் ஒன்றிணைய முடியாது.

அதனால், இவ்விடயத்தில் இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியாவால் எடுக்க முடியாது என்பது புரிந்து கொள்ளத்தக்கதே. அத்தோடு இது தமிழ்நாட்டுத் தேர்தல் சமயம் வேறு.

என்றாலும், இப்பிணக்கின் எதிரெதிர்த் தரப்புகளினாலும் பாராட்டப்படக் கூடிய ஒரு நிலைப்பாட்டை எடுத்து வெற்றி கண்டிருக்கின்றது இந்திய இராஜதந்திரம் என்றே கூற வேண்டும்.

# இலங்கை மக்களுக்குக் கிடைத்த வெற்றி ராஜபக்ஷ அரசைக் கண்காணிக்க உத்தரவு!

### சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு

மனித உரிமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை இலங்கை மக்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றி என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் நிறைவேற்று இயக்குநர் கென்னத் ரோத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது டுவிட்டரில் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை இலங்கை மக்களுக்கு பெரும் வெற்றி. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை 22 இற்கு 11 என்ற அடிப்படையில் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்களுக்கான எந்த பொறுப்புக்கூறலும் இல்லை என்பதை மனித உரிமை பேரவை அங்கீகரித்துள்ளதுடன் ராஜபக்ஷ அரசாங்கத்தை தொடர்ந்தும்கண்காணிக்குமாறுஉத்தரவிட்டுள்ளது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழே விக்னேஸ்வரனுக்கு எதிராக விசாரணை!

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீ.விக்னேஸ்வரனுக்கு எதிராக சி.ஐ.டி.யினர் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விடயம் தொடர்பாக கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் சி.ஐ.டி.யினர் பீ அறிக்கையை சமர்ப்பித்து இதனை அறிவித்துள்ளனர்.

கடந்த 2020 ஓகஸ்ட் மாதம், தனியார் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற விக்னேஸ்வரன் வெளியிட்டிருந்தார்.

குறித்த கருத்துக்கள் இனங்களிடையே, நாட்டில் குழப்பத்தை தோற்றுவிக்கும் வகையில் அமைந்திருந்ததாகக் கூறி, முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் பயங்கரவாதத் தடை சட்டம், சிவில் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டம் மற்றும் தண்டனை சட்டக் கோவைகளின் கீழ் இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன என சி.ஐ.டியினர் நீதிவானுக்கு அறிவித்துள்ளனர்.

# எண்ணெய்த் தாங்கியில் ஏறிய முதலாவது எரிசக்தி அமைச்சர்!

### உதய கம்மன்பில சாதனை



அமைச்சர் உதய கம்மன்பில ஒரு தனித்துவமான சாதனை படைத்துள்ளார், இலங்கையில் எண்ணெய் தாங்கியில் ஏறிய முதல் எரிசக்தி அமைச்சர் என்ற பெருமையை பெற்றார்.

அமைச்சர் தனது அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் தனது சாதனையை பதிவிட்டுள்ளார்.

அந்தப்பதிவில், இலங்கை பெற்றோலியம் கூட்டுததாபன (சிபிசி) தகவலின்படி, எண்ணெய் தாங்கியில் ஏறிய முதல் எரிசக்தி அமைச்சர் தான் என்பதை அவர் பெருமையுடன் தெரிவித்துள்ளார். அமைச்சர் கம்மன்பில கடந்த திங்கட்கிழமை எண்ணெய் தாங்கியில் ஏறியமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டுக் காலத்தில் பொருள்களின் விலைகள் எகிறும் அபாய நிலைமை!

### முஜிபுர் ரஹ்மான் எச்சரிக்கை



அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதாரக் கொள்கை காரணமாகவே பொருள்களின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்கின்றது.

புத்தாண்டு காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலை இன்னும் அதிகரிக்கும் அபாயம் இருக்கின்றது என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நிதி அமைச்சின் கீழ் இருக்கும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி(கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

சீனி இறக்குமதி வரி குறைப்பால் அரசாங்கத்துக்கு வருமானம் இல்லாமல் போயிருப்பதாகக் கடந்த 3 மாதங்களுக்கு முன்பிருந்து நாங்கள் தெரிவித்து வருகின்றோம்.

அதன் பின்னர் நிதி அமைச்சால் நாடாளுமன்ற நிதி குழுவுக்கு வழங்கப்பட்ட அறிவிப்பில் சீனி வரி குறைப்பால் அரசாங்கத்துக்கு 15.9பில்லியன் ரூபா வருமானம் இல்லாமல் போயிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்போது அரசாங்கத்தில் இருப்பவர்கள் யாரும் அதுதொடர்பில் வாய் திறக்கவில்லை.

ஆனால் சீனி இறக்குதி வரிகுறைப்பால் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படவில்லை எனத் தற்போது அரசாங்கத்தில் இருப்பவர்கள் வாய் திறக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

ஜனாதிபதியைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுகின்றனர். சீனி இறக்குமதியால் ஆயிரத்து 300 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சீனி இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனி இறக்குமதிக்கான வரிகுறைப்பால் அரசாங்கத்துக்குக் கிடைக்காமல் போன 1,600 கோடி ரூபா யாருக்கு சென்றது என்பது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

இதுதொடர்பாகத் தடயவியல் கணக்கு விசாரணை ஒன்றை மேற்கொள்வதன் மூலமே இதன் உண்மையான நஷ்டத்தைக் கண்டு பிடிக்க முடியும். அதன் மூலமே இதன் திருடர்கள் யார் என்பதை தேடிக்கொள்ள முடியும்.

சீனி இறக்குமதிக்கான வரி குறைப்பு செய்த பின்னர் எமது வர்த்தக சந்தையில் சீனி ஒரு கிலோ 113 ரூபா முதல் 135 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டிருப்பதாக புள்ளிவிவர திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

மேலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பதுளை பிரதேசத்தில் பஸ் விபத்து ஏற்பட்டதில் 15 பேர்வரை உயிரிழந்திருக்கின்றனர். அதனால் தற்போது அரசாங்கம் அதனைக் காரணம் காட்டி வாகனங்களின் டயர்களை பரிசோதித்து, டயர் தேய்வடைந்திருந்தால் அதற்கு தண்டம் அறவிடும் நடவடிக்கையை ஆரம்பிதிருக்கின்றது.

அரசாங்கம் கடந்த காலத்தில் ஒருசில வகையான டயர்களை இறக்குமதி செய்யத் தடை விதித்திருந்தது. அதனால் சில வாகனங்களுக்குத் தேவையான டயர் சந்தையில் விற்பனைக்கு இல்லை.

எனவே, அரசாங்கத்துக்குத் தற்போது வருமானம் இல்லாதமையால் தற்போது சாதாரண வாகன உரிமையாளர்களிடமும் தண்டம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இவ்வாறான நிலையில் எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் பொருள்களின் விலை மேலும் அதிகரிக்கும் அபாயம் இருக்கின்றது. – என்றார்.

# தேசிய மயமாக்கப்பட்ட நிறுவனங்களை விற்பனை செய்கிறது பா.ஜ.க. அரசு!

## மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு



‘அரசின் நிறுவனங்களை மத்திய பா.ஜ.க. அரசு விற்பனை செய்து வருகிறது’ என்று மேற்கு வங்க முதல்வரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி, புரூலியா மாவட்டத்தில் உள்ள காசிபூர், ரகுநாத்பூர் ஆகிய இடங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவா உரையாற்றிய போது இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

‘மேற்கு வங்க பேரவைத் தேர்தலையொட்டி இந்த மாநில மக்களுக்கு மிகப்பெரிய வாக்குறுதிகளை பா.ஜ.க. அளித்து வருகிறது. ஆனால், திரிபுரா, அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் கடந்த சட்டப் பேரவைத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை அவர்கள் இன்னும் நிறைவேற்றவில்லை.

‘தேசிய மயமாக்கப்பட்ட தொலைத்தொடர்பு நிறுவனம், வங்கிகள், ஏயார் – இந்தியா விமான நிறுவனம் ஆகியவற்றையும் அரசின் மற்ற நிறுவனங்களையும் விற்பனை செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அனைத்து நிறுவனங்களையும் மூடிய பிறகு, பிரதமர் மோடியின் பொய்கள் நிரம்பிய தொழிற்சாலை மட்டுமே இருக்கும்.

‘பா.ஜ.கவின் எவ்வித அச்சுறுத்தலையும் கண்டு பின்வாங்க மாட்டேன். என்னை முடக்கினால், என்னால் வெளியேற வர முடியாது; எதுவும் செய்ய முடியாது என்று பா.ஜ.க. நினைத்துக் கொண்டிருந்தது. ஒரு காலுடனும் நான் மைதானத்தில் களமாடுவேன்.

‘சட்டப் பேரவைத் தேர்தலில் பா.ஜ.கவை வெற்றிபெறச் செய்வதற்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேதப்படுத்தப்படலாம். எனவே, வாக்குப்பதிவு நடைபெறும் நாள்களில் இருந்து வாக்கு எண்ணிக்கை முடியும் வரை திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் முகவாகள் மிகுந்த கவனமாகவும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். பா.ஜ.க. தொண்டர்கள் தரும் உணவு உபசரிப்பை ஏற்கக் கூடாது. அவற்றில் மயக்க மருந்து கொடுத்து உங்களை உறங்க வைத்துவிட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்களில் அவர்கள் முறைகேடு செய்து விடுவார்கள்’ என்று தனது உரையில் மம்தா பானர்ஜி குறிப்பிட்டார்.

# பாக். குடியரசுத் தினத்துக்கு பிரதமர் மோடி வாழ்த்து



பாகிஸ்தானின் குடியரசுத் தினத்தையொட்டி அந்த நாட்டு பிரதமர் இம்ரான்கானுக்கு இந்தியப் பிரதமர் மோடி வாழ்த்துக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், ‘ஓர் அண்டை நாடாக பாகிஸ்தானுடன் இணக்கமான உறவையே இந்தியா விரும்புகிறது. ஆனால் இது நிறைவேற நம்பிக்கையான சூழல் அமைய வேண்டும். அதற்கு தீவிரவாதமும் வெறுப்பும் ஒழிக்கப்பட வேண்டும். கொரோனா வைரஸ் பெருந்தொற்றை எதிர்கொண்டு சமாளித்து வரும் இம்ரான்கானுக்கும் பாகிஸ்தான் மக்களுக்கும் வாழ்த்துகள்’ என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே கடந்த 2003 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு மற்றும் சர்வதேச எல்லைப் பகுதியில் அமைதியும் கட்டுப்பாடும் நீடிக்கச் செய்ய இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

ஆயினும், எல்லைப் பகுதியில் இரு நாடுகளுக்குமிடையில் அவ்வப்போது சில சிறிய மற்றும் பெரிய முறுகல்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டுவந்தன. இந்நிலையில் கடந்த சில மாதங்களாகவே இந்தியா பாகிஸ்தான் இடையே இணக்கமான சூழல் நிலவுவது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் பாகிஸ்தான் இராணுவம் தாமாகவே முன்வந்து, எல்லையில் அத்துமீறுவதில்லை என்ற 2003 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கத் தொடங்கியதாக நம்பப்படுகிறது. இதன் இன்னுமொரு முன்னேற்றமாக, சிந்துநதி ஆணையப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பாகிஸ்தான் உயர்மட்டக் குழு கடந்த வாரம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது

# தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் நாளை முதல் தேர்தல் பிரசாரத்தில்!

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அக்கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாளை வியாழக்கிழமை முதல் பிரசாரத்தில் ஈடுபட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



சட்டப் பேரவைத் தேர்தலில் அ.ம.மு.க. தலைமையில் கூட்டணி அமைத்து தே.மு.தி.க. போட்டியிடுகிறது. இந்த சட்டப் பேரவைத் தேர்தலில் விஜயகாந்த் போட்டியிடாத நிலையில் விருத்தாசலம் தொகுதியில் அவரின் மனைவியும் தே.மு.தி.கவின் பொருளாளருமான பிரேமலதா விஜயகாந்த் போட்டியிடுகிறார்.

இந்நிலையில், தே.மு.தி.க. மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திருத்தணியில் நாளை வியாழக்கிழமை முதல் விஜயகாந்த் பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின் வேட்பாளர் பட்டியல் வெளியானது



தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் 4,061 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். ஐந்து முனைப் போட்டி நிலவும் சூழலில், கடந்த பேரவைத் தேர்தலைக் காட்டிலும் அதிக வேட்பாளர்கள் களம் காண்கின்றனர்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த 12 ஆம் திகதி தொடங்கி 19 ஆம் திகதி நிறைவடைந்தது. மொத்தமாக 7, 255 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், 4,488 மனுக்கள் ஏற்கப்பட்டன. இந்த வேட்புமனுக்களில் 440 க்கும் கூடுதலான மனுக்கள் வாபஸ் பெறப்பட்டன. இதையடுத்து, இறுதி வேட்பாளர் பட்டியல் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

அதன்படி, சட்டப் பேரவைத் தேர்தலில் 4,061 வேட்பாளர்கள் போட்டியிட தெரிவாகியுள்ளனர். போட்டியிடும் வேட்பாளாகளில் ஆண்கள், பெண்கள் குறித்த தனித்த விவரங்களை தமிழக தேர்தல் துறை நேற்று வெளியிடவில்லை. இந்த விவரங்கள் இன்று புதன்கிழமை வெளியாகும் என தேர்தல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆண்கள் சார்பில் 6,184 வேட்பு மனுக்களும், பெண்கள் தரப்பில் 1,068 மனுக்களும், மூன்றாம் பாலித்தனவர் சார்பில் 3 மனுக்களும் அளிக்கப்பட்டிருந்தன.

கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளில் 3,728 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அவர்களில் 3,406 ஆண்களும், 320 பெண்களும், 2 மூன்றாம் பாலித்தனவர்களும் தேர்தல் களம் கண்டனர். இந்தப் போட்டியில் மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட 20 பெண்கள் பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இம்முறை நடைபெறவுள்ள தேர்தலிலும் சுமாா 400 பெண் வேட்பாளர்கள் இறுதிப்பட்டியலில் இடம்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. நாம் தமிழா கட்சி சார்பில் மட்டும் 117 பெண்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனா. மற்ற கட்சிகளில் 20 இற்கும் குறைவானவர்களே பெண் வேட்பாளர்களாக களம் காணவுள்ளனர்.

கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் தமிழகம் ஆறு முனைப் போட்டியைச் சந்தித்தது. தனித்துக் களம் கண்ட பாட்டாளி மக்கள் கட்சி இந்த முறை அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்துள்ளதால் ஐந்து முனைப் போட்டியாக மாற்றம் ஏற்பட்டுள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., மக்கள் நீதி மய்யம், அ.ம.மு.க. மற்றும் தே.மு.தி.க. ஆகிய கட்சிகளின் தலைமையில் கூட்டணிகள் அமைக்கப்பட்டுள்ளன. 234 தொகுதிகளிலும் நாம் தமிழா கட்சி தனித்து களம் காண்கிறது.

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், தமிழகத்தில் அரசியல் கட்சித் தலைவாகளின் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பேரவைத் தேர்தலுக்கான பிரசாரம் ஏப்ரல் 4 ஆம் திகதி நிறைவடைகிறது. வாக்குப் பதிவு ஏப்ரல் 6 ஆம் திகதியும், வாக்கு எண்ணிக்கை மே 2 ஆம் திகதியிலும் நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

# போராட்டத்தைக் கைவிடும் எண்ணம் இல்லை டெல்லியில் விவசாயிகள் உறுதியான முடிவு

‘டிசெம்பர், நவம்பர் வரை போராட்டம் தொடர்ந்தாலும் பரவாயில்லை எக்காரணத்தை கொண்டும் போராட்டத்தை இடையில் கைவிட மாட்டோம்’ என்று டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசின் மூன்று புதிய வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறக் கோரி கடந்த 118 நாள்களாக ஹரியானா, உத்தரப்பிரதேசம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் டெல்லி எல்லைகளான சிங்கு, டிகிரி, காசிப்பூர் போன்ற இடங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மத்திய அரசு அமுல்படுத்தியுள்ள வேளாண் சட்டங்களின் மூலம் நேரடி கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டு, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்காது என்பது அவர்களது முக்கிய குற்றச்சாட்டாகும். போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர விவசாயிகள்



சங்கத்தினருக்கும் மத்திய அரசுக்கும் இடையே நடந்த 11 சுற்றுப் பேச்சும் தோல்வியில் முடிந்தன.

இந்த நிலையில் சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங் நினைவு நாள் நாடு முழுவதும் நேற்று அனுசரிக்கப்பட்டது. டெல்லியில் சுதந்திர போராட்ட வீரர் பகத் சிங் நினைவு நாளை அனுசரித்த பஞ்சாப் விவசாயிகள், பகத் சிங் தூக்கில் போடப்பட்டதை நினைவு கூர்ந்து பேசினர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய விவசாயிகள் போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் ராகேஷ் திகாய்த், ‘எங்களின் போராட்டம் தொடரும். எத்தனை நாள்கள் ஆனாலும் போராட்டத்தை கைவிடும் எண்ணம் இல்லை. அனைத்திற்கும் தயாராகவே வந்திருக்கிறோம். சட்டத்தை அரசு வாபஸ் வாங்க வேண்டும் என்பதே எங்களின் ஒரே கோரிக்கை. அதுவரை போராட்டம் தொடரும். டிசெம்பர், நவம்பர் வரை போராட்டம் சென்றாலும் பரவாயில்லை. கண்டிப்பாக எங்களின் கோரிக்கையை விட்டுக்கொடுக்கும் எண்ணம் இல்லை. இந்தியா முழுக்க போராட்டத்தை கொண்டு செல்லும் முடிவில் நாங்கள் இருக்கிறோம்’ என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலில் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் நெதன்யாஹுவுக்கு வெற்றி



இஸ்ரேலில் நடந்த தேர்தலில் மீண்டும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு வெற்றி பெற்று உள்ளார்.

பொருளாதார சீர்கேடு, கொரோனா பரவலை கையாள்வதில் ஏற்பட்ட சிக்கல் உள்ளிட்ட காரணங்களால் இஸ்ரேல் பிரதமருக்கு கடும் நெருக்கடிகள் ஏற்பட்டு அதன் விளைவாக அங்கு கடந்த 2 ஆண்டுகளில் 4 முறை தேர்தல் நடக்கும் சுழல் நிலவியது.

4 ஆவது முறையாக நடந்த தேர்தலில் பிரதமர் நெதன்யாஹு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார்.

இதுகுறித்து நெதன்யாஹு தனது டுவிட்டர் பக்கத்தில் தேர்தலில் அமோக வெற்றி அளித்த இஸ்ரேல் மக்களுக்கு நன்றி தெரிவித்து உள்ளார்.

பெருவாரியான தொகுதிகளை நெதன்யாஹுவின் லிக்குட் கட்சி வெல்லாத நிலையில் அங்கு கூட்டணி ஆட்சி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம் 5 ஆவது தேர்தலுக்கும் வாய்ப்பு வரலாம் என மக்கள் அச்சம் கொண்டு உள்ளனர்.

# ரஷ்யாவில் போர் விமானத்தில் இருந்து தரையில் விழுந்ததில் 3 விமானிகள் பலி



ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இருந்து 150 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கலுகா பிராந்தியத்தில் விமானப்படை தளம் உள்ளது. இங்கிருந்து நேற்று காலை, ஒலியை விட வேகமாக செல்லும் இரட்டை என்ஜின் கொண்ட டியூ – 22 எம்3 ரக குண்டு வீச்சு விமானம் வழக்கமான பயிற்சிக்காக புறப்பட தயாராக இருந்தது. விமானத்தில் விமானிகள் 3 பேர் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தனர்.

அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாக, விபத்து காலங்களில் விமானிகளை தானாக விமானத்தில் இருந்து வெளியேற்றும் அமைப்பு தவறுதலாக செயல்பட்டு 3 விமானிகளையும் வெளியேற்றியது.

இதில் 3 பேரும் விமானத்திலிருந்து தரையில் விழுந்ததில் அவர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் கொண்டு செல்லப்பட்டனர். எனினும் சிகிச்சை பலனின்றி 3 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

# தவூஷா ராணாவை இந்தியாவுக்கு நாடுகடத்த அனுமதி கோரி அமெரிக்க நீதிமன்றில் மனு





மும்பை பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட தவூஷா ராணாவை இந்தியாவுக்கு நாடுகடத்த ஒப்புதல் அளிக்குமாறு கலிபோர்னியா நீதிமன்றத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நிர்வாகம் முறையிட்டுள்ளது.

மகாராஷ்டிராத் தலைநகர் மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தாக்குதல் நிகழ்த்த திட்டமிட்டவர்களில் ஒருவர் டேவிட் கோல்மேன் ஹெட்லி என அடையாளம் காணப்பட்டார். அவருக்கும் லஷ்கா – ஏ –தொய்பா அமைப்பைச் சோந்த பயங்கரவாதிகளுக்கும் உதவி செய்ததாக தவூஷா ராணா மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக அமெரிக்காவில் தொடுக்கப்பட்ட வழக்கில் ஹெட்லி ஒப்புதல் சாட்சியாக மாறினார். அதைத் தொடர்ந்து கடந்த 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட ராணாவுக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொரோனா நோய்த்தொற்று பாதிப்பு, நன்னடத்தை உள்ளிட்டவற்றைக் கருத்தில் கொண்டு தன்னை விடுவிக்கக் கோரி அவர் மனுத் தாக்கல் செய்தார். அதையடுத்து கடந்த ஆண்டு ஜூனில் ராணா விடுவிக்கப்பட்டார். இதனிடையே, ராணாவை நாடு கடத்தக் கோரி அமெரிக்காவிடம் இந்திய அரசு கோரியிருந்தது. அதனடிப்படையில், கடந்த ஆண்டு ஜூனில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், அவரை இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சலிஸ் நகரில் உள்ள நீதிமன்றத்தில் அமெரிக்க அரசு முறையிட்டுள்ளது.

இது தொடர்பாக, அமெரிக்க அரசின் துணை சட்டத்தரணி ஜான் லுலேஜியன் தாக்கல் செய்துள்ள மனுவில், 'தவூஷா ராணாவை நாடு கடத்துவதற்குத் தேவையான அனைத்து ஆதாரங்களும் சரியாக உள்ளன. மும்பை பயங்கரவாதத் தாக்குதல் வழக்கு தொடர்பாக இந்தியாவில் அவர் மீது விசாரணை நடத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, அவரை நாடு கடத்துவதற்கு நீதிமன்றம் விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த மனு மீதான விசாரணை ஏப்ரல் 22ஆம் திகதி நடைபெறும் என்று லொஸ் ஏஞ்சலிஸ் மாவட்ட நீதிபதி ஜாக்கலின் சூல்ஜியன் தெரிவித்துள்ளார். தன்னை நாடு கடத்துவதற்கு தவூர் ராணா கடந்த மாதம் மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 18 நாடுகளுடைய 38 செயற்கைக்கோள்களை விண்ணில் வெற்றிகரமாக செலுத்தியது ரஷ்யா



ரஷ்யா 18 நாடுகளைச் சேர்ந்த 38 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது.

தென்கொரியா, ஜப்பான், கனடா, சவுதி அரேபியா, ஜேர்மனி, இத்தாலி, பிரேஸில் உள்ளிட்ட நாடுகளின் செயற்கைக் கோள்களுடன் இதில் துனிசியாவின் முதல் உள்நாட்டுத் தயாரிப்பான சேலஞ்ச் 1 செயற்கைக் கோளும் செலுத்தப்பட்டது. கஜகஸ்தானில் உள்ள பைக்கானுர் ஏவுதளத்தில் இருந்து இவை விண்ணில் செலுத்தப்பட்டன.

இருளும் ஈரமும் மிக்க மேகங்களுக்கு இடையே சோயுஸ் ரொக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள்கள் புவிவட்டப் பாதையில் செலுத்தப்படும் வீடியோ காட்சியை ரஷ்யாவின் விண்வெளி ஆய்வு ஏஜன்சி வெளியிட்டது.

# தைவானில் 2 போர் விமானங்கள் மோதி கடலில் விழுந்ததில்; விமானி ஒருவர் பலி



தாய்வானின் தெற்குப் பகுதியில் உள்ள கடற்கரை நகரமான பிங்டங் நகரில் இருந்து அந்த நாட்டு விமானப்படைக்கு சொந்தமான எப்5இ ரக போர் விமானங்கள் 4 வழக்கமான பயிற்சிக்காக புறப்பட்டு சென்றன.

கிளம்பிய சிறிது நேரத்துக்கு பிறகு இதில் 2 விமானங்கள் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தன. இதையடுத்து விமானப் படைக்கு சொந்தமான ஹெலிக்கொப்டர்கள் மற்றும் கப்பல்கள் மூலம் மாயமான விமானங்களை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

இதில் 2 விமானங்களும் ஒன்றோடு ஒன்று மோதி கடலுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் விமானி ஒருவர் சுயநினைவை இழந்த நிலையில் கடலில் இருந்து மீட்கப்பட்டார். ஹெலிக்கொப்டர் மூலம் உடனடியாக அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

இந்த கோர விபத்தில் மற்றொரு விமானி மாயமாகியுள்ளார். அவரின் கதி என்ன என்பது தெரியவில்லை. அதே சமயம் அங்கு உள்ள ஒரு நெடுஞ்சாலையில் விமானத்தில் இருக்கை மற்றும் பராசூட் கிடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மாயமான அந்த விமானியை தேடும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

# உலகில் பாதுகாப்பான நகரம் 'டுபாய்' ஆய்வில் தகவல்



உலக வங்கி வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்ள உதவும் நகரங்கள் தொடர்பாக ஆய்வு செய்தது. இந்த ஆய்வின் அடிப்படையில் டுபாய் நகரம் உலகில் பாதுகாப்பான நகரங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது.

இதுமட்டுமல்லாமல் கொரோனா பாதிப்பு சூழ்நிலையை டுபாய் நகரம் கையாண்டு வரும் விதமும் இதற்கு ஒரு காரணமாக திகழ்ந்து வருகிறது. டுபாய் நகரம் தனது சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படுத்த சிறப்பான பல்வேறு முடிவுகளை எடுத்து வருகிறது. இந்த திட்டங்கள் மற்றும் முடிவுகள் காரணமாக உலகின் பல நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்களும் இங்கு முதலீடு செய்ய அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புபாய் நகரம் முதலீட்டாளர்களை மட்டுமல்லாமல் பல்வேறு திறமைகளை கொண்டிருப்பவர்களையும் அதிகம் கவர்ந்து வருகிறது. இங்கு இருந்து வரும் சிறப்பான பாதுகாப்பு அவர்கள் தங்களது வாழ்க்கையை டுபாயில் அமைத்துக் கொள்ள முக்கிய காரணமாக இருக்கிறது. குறிப்பாக தனிநபர் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, சுகாதாரம், டிஜிட்டல் பாதுகாப்பு உள்ளிட்டவை முக்கியமாக கருதப்படுகிறது.

# பைடனின் அமைச்சரவை தலைமை அறுவை சிகிச்சை நிபுணராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் மூர்த்தி நியமனம்



அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அமைச்சரவையில் தலைமை அறுவை சிகிச்சை நிபுணராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் மூர்த்தி நியமனம்

இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் மூர்த்தியை அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அமைச்சரவையில் தலைமை அறுவை சிகிச்சை நிபுணராக நியமிக்கும் பிரேரணைக்கு செனட் சபை ஒப்புதல் அளித்து உள்ளது.

விவேக் மூர்த்தியை தலைமை அறுவை சிகிச்சை நிபுணராக அதிபர் பைடன் நியமித்த நிலையில் அதற்கான மசோதா செனட் சபையில் தாக்கல் செய்யப்பட்டது.

சபையில் 57 இற்கு 43 என்ற கணக்கில் ஆதரவு வாக்குகள் கிடைத்த நிலையில் இந்திய வம்சாவளியான விவேக் மூர்த்தியின் நியமன பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

# இந்து மயானத்தை முஸ்லிம்கள் ஆக்கிரமிக்க பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை

## ஆர்ப்பாட்டம் வேடிக்கை - யம்புரரேவல சந்தரத்தின தேரர்

மட்டக்களப்பு ,மார்ச் 24

தமிழ் மக்களின் இந்து மயானத்தை முஸ்லிம்கள் ஆக்கிரமித்த நிலையில் தமிழ் மக்கள் தமது இறந்த உறவினரது உடல்களை அடக்கம் செய்ய முடியாமல் அநாதரவான நிலையில் அவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியாத நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உட்பட தமிழ் தலைமைகள் முஸ்லிம்களின் ஜனாஸாவை அடக்கம் செய்யகோரி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான ஆர்ப்பாட்டம் வேடிக்கையாக உள்ளது என சிங்களே அப்பி சங்கிவிதான அமைப்பின் தலைவர் யம்புரரேவல சந்தரத்தின தேரர் தெரிவித்தார்.

சிங்களே அப்பி சங்கிவிதான அமைப்பின் தலைவர் யம்புரரேவல சந்தரத்தின தேரர் தலைமையிலான தேரர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கோல்டன் பெர்னாண்டோ குழுவினர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் இனநல்லுறவு தொடர்பான 3 நாள் விஜயம் ஒன்றை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் மேற்கொண்டனர்.

இதன்போது அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள அட்டப்பள்ளம் தமிழ் மக்களின் இந்து மயானம் முஸ்லிம்களால் நில அபகரிப்பு தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்ட தேரர் கருத்து தெரிவிக்கை யில் இவ்வாறு தெரித்தார்.

குறித்த பிரதேசத்திலுள்ள சுமார் 1,200 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இவர்களின் உறவினர்களை உயிரிழந்தவர்களை அந்த பகுதியிலுள்ள கடற்கரையை அண்டிய பகுதியில் சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள இந்து மயானத்தில் சடலங்களை புதைத்து வருகின்றனர்

இந்த நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு அந்த இந்து மயானத்தை முஸ்லிம் நபர் ஒருவர் தனது காணி என போலி காணிப் பத்திரத்துடன் உரிமைகோரி இந்து மயானத்தில் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட பகுதியை மயானத்தின் நடுவே கம்பிவேலி அமைத்து அபகரிக்க முற்பட்வேளை பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தவேளை மயானத்தை உரிமைகோரிய முஸ்லிம்



நபரை தாக்கியதாகவும் அதற்கு உறுதுணையாக இருந்த அரச அதிகாரிகளை கடமைசெய்ய விடாது தடுத்ததாக அந்த அப்பாவி பொதுமக்கள் 21 பேரை பொலிசார் கைது செய்து அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் இரண்டு வழக்கு தாக்குதல் செய்துள்ளனர்

இவ்வாறான நிலையில் பூர்விகமாக வாழ்ந்துவரும் இந்த தமிழ் மக்கள் தமது இறந்த உறவுகளை அடக்கம் செய்து வந்த இந்த மயானத்தை முஸ்லிம் நபர் அபகரித்துள்ளமை கண்டிக்கத்தக்கது அதேவேளை இந்த தமிழ் மக்கள் தமது இறந்த உறவுகளின் உடல்களை புதைக்க முடியாமல் கடந்த 3 வருடங்களாக இருந்துவருகின்ற நிலையில் தமது தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டிய தமிழ் அதனை செய்யாது சர்வ தேசத்திற்கு எமது நாட்டினை இக்கட்டுக்குள்ளாகவே முன்வருகின்றனர்.

கிழக்கு மாகாணம்தான் கள்ள உறுதி வியாபாரம் செய்யும் பிரதானமான மர்ம இடமாகவுள்ளதுடன் கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களில் இருக்கும் பெரும்பான்மையானவர்கள் கள்ளமாக உறுதிமுடிப்பவர்கள் என நாங்கள் சில தினங்களில் மேற்கொண்ட கண்காணிப்பில் தெரியவந்துள்ளது

முஸ்லிம் இன உத்தியோகத்தர்களுக்கு மிக தெளிவாக கூறுகின்றோம் பல பிரதேச செயலாளர்கள் அதற்கு கீழ்உள்ள உத்தியோகத்தர்களும் வேறு அரச திணைக் களங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களும் இணைந்து குழுவாகத்தான் இந்த காணி வியாபாரத்தினை மேற்கொள்கின்றார்கள். இவ்வாறு தமிழ் மக்களுடைய இடங்களை பறித்தெடுக்கின்றார்கள். தமிழ் மக்களிடம் இருந்து வாக்குகளைப் பெற்ற எந்த அரசியல் வாதிகளும் இவர்களுக்காக முன்வருவதில்லை

இவ்வாறு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தமிழ் அரசியல் வாதிகள் தீர்த்து வைக்காது கொரோனாவில் உயிரிழந்த முஸ்லிம் மக்கள் உடல்களை புதைக்க கோரி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். தனது இனம் தன்னுடைய மதம் தன்னுடைய மக்களுக்கான இறந்த உடல்களை புதைக்கும் இடத்தினை பாதுகாத்து அவர்களுக்கு வழங்க முடியாத மக்கள் பிரதிநிதிகளால் ஏதேனும் பயன்கள் இருக்கின்றதா என்ற கேள்வியை கேட்கின்றேன்.

எனவே அரசாங்கம் சட்டரீதியாக பரம்பரைபரம்பரையாக தங்களது உறவினரது சடலங்களை புதைத்துவந்த இந்த மயானத்தை பலவந்தமாக பறித்து கள்ள உறுதி முடிக்கும் இந்த வியாபாரத்தை மேற்கொள்ளும் இவர்களை கைது செய்யவேண்டும் என்பதுடன் ஜனாதிபதி, கிழக்குமாகாண ஆளுநர், அவர்களுபக்கு ஞாபகப்படுத்துகின்றோம் இந்த தமிழ் மக்கள் முகம் கொடுத்துள்ள பாரதூரமான காணிப் பிரச்சினைக்கு தீர்வு கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எனவே நாம் மீண்டும் இந்த பிரதேசத்திற்கு பயணிக்கும்வேளை தமிழ் மக்களிடம் இருந்து பறித்தெடுத்த காணிகளை எவ்வித பிரச்சினைகளுமின்றி இவர்களுக்கு வழங்குவதற்காள சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் இந்த இரவு வேளைகளில் கட்டப்பட்ட கம்பிவேலி மற்றும் கட்டம் அனைத்தையும் அகற்றுவதற்கு மஹா சங்கரதன இருமுறை யோசிப்பதில்லை நாங்கள் முன்னின்று வேலிகளை அகற்றி கட்டடங்களை அகற்றி இதனை மயானமாக மாற்றுவித்ததன் பின்னர்.

இதற்கு எதிராக செயற்பட்டுள்ளீர்கள் என சட்டப் புத்தகங்களையும் சட்டங்களையும் எடுத்துக் கொண்டு வரவேண்டாம். என்றார்.

# ஜெனிவாவில் இலங்கையின் இந் நிலைமைக்கு இன வெறுப்பு அரசியலே முக்கியமான காரணம்

## கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி



திருகோணமலை ,மார்ச் 24

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு ஏற்பட்ட இந்த நிலைமைக்கு இனவெறுப்பு செயற்பாடுகளே காரணமாகும் என கிண்ணியா நகர சபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளருமான எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

இன்று கிண்ணியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை எண்ணி மிகவும் கவலைப்படுகிறேன். இந்த நாட்டில் சிறுபான்மை சமூகத்துக்கு எதிராக சில அரசியல்வாதிகளாலும், கடும்போக்காளர்களாலும் அரங்கேற்றப்படுகின்ற இன வெறுப்பு செயற்பாடுகளும், உரிமை மீறல்களாலுமே இந் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

30 வருடகால யுத்தத்தின் போது ஏற்பட்டிருக்காத இந்த கவலையான விடயம் தற்போது அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் சமூகத்தின் மீது அரங்கேற்றப் பட்ட ஜனாஸா எரிப்பு, நிகாப் தடை, மத்ரஸாக்களை மூடுதல் போன்ற வெறுப்பு பான செயற்பாடுகள், இஸ்லாமிய நாடுகளுக்கு ஏற்பட்ட அதிருப்தி, இந்தியாவுடன் ஏற்பட்ட இடைவெளி, சீனாவின் ஆதிக்கம் ஆகியவை இந்நிலைமைக்கு காரணங்களாக அமைந்திருக்கலாம்.

இந்நாட்டில் வாழும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் சமூகங்கள் சகவாழ்வை உறுதிப்படுத்தி சமத்துவமாக, இன நல்லுறவோடு, வாழ்வதை உறுதிப்படுத்தினாலே அன்றி வீழ்ச்சியில் இருந்து மீண்டு இந்நாடு அபிவிருத்தியில் முன்னேறப் போவதில்லை.

எனவே எதிர்காலத்தில் இன வெறுப்பான செயற்பாடுகளை அரங்கேற்றுவோரின் விடயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் கவனம் செலுத்தி எதிர்காலத்திலும் இவ்வாறான ஒரு துன்பியல் சம்பவத்திற்கு மீண்டும் வாய்ப்பளிக்காமல் அவர்களை கட்டுப்படுத்தி சக வாழ்வை ஏற்படுத்த கரிசனை காட்ட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்

# நுவரெலியா கல்வி வலயத்தில் சுகாதார அதிகாரிகள் சோதனை



நுவரெலியா,மார்ச் 24

நுவரெலியா கல்வி வலயத்திற்கு உட்பட்ட கொட்டகலை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் சுகாதார அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

பாடசாலையினுள் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வில்லை என மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி செயற் குழுவினால் செய்யப் பட்ட முறைப்பாட்டிற்கு அமைய இவ்வாறு சுகாதார அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். குறித்த பாடசாலையில் இது வரையில் 10 ஆசிரியர்கள் மற்றும் 10 மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையினுள் சுகாதார நடை முறைகள் பின்பற்றப்படாமை இனங்காணப்பட்ட பின்னர் சுகாதார அதிகாரிகள் அதிபரை கடுமையாக எச்சரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# HNDE மாணவர்களின் போராட்டத்துக்கு தீர்வு

திருகோணமலை,மார்ச் 24

கிழக்கு மாகாணத்தில் ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கான வினாத்தாள்கள் கசிந்ததாகக் கூறப்படுவது குறித்து நியாயமான விசாரணை நடத்துவதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உறுதியளித்துள்ளார்.

HNDE மாணவர்கள் ஒன்றரை நாள் போராட்டத்தை முடித்து, ஆளுநரைப் புகழ்ந்து, ஆளுநர் அலுவலகத்திலிருந்து வெளியேறினர்.

கிழக்கு மாகாணத்திற்கு ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க பெப்ரவரி 25 அன்று பரீட்சை நடைபெற்றது. முன்னதாக, மாணவர்கள் ஆளுநரிடம் எழுத்துப்பூர்வமாக அநீதிக்கு எதிராக மகஜரும் கையளித்தனர். ஆளுநரை சந்திக்கக் கோரி மாணவர்கள் நேற்று முன்தினம் காலை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகம் முன் போராட்டம் நடத்தினர்.

நேற்று காலை பல முக்கிய கூட்டங்களில் கலந்து கொள்ள கொழும்பில் இருந்த ஆளுநர் ZOOM தொழில்நுட்பம் ஊடாக குறித்த மாணவர்களை தொடர்பு கொண்டு, இந்த மாணவர்களின் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்றார். பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் நியமனங்கள் வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநரிடம் மாணவர்கள் இதன் போது கேட்டுக்கொண்டனர்.

மேலும், இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான வயது எல்லையை 40 ஆக உயர்த்தவும், ஆங்கில ஊடகத்தில் பிற பாடங்களைக் கொண்ட பட்டதாரிகளுக்கு ஆங்கில ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதை நிறுத்தவும் அவர்கள் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த உண்மைகளின் அடிப்படையில் எதிர்கால ஆட்சேர்ப்புக்கு தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு ஆளுநர் பின்னர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தினார். இதில் ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதானநாயக்கவும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல் திருவிழா!

## ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் வெளிநாட்டு வீரர்கள் தாமதம்



ஐ.பி.எல்.லில் விளையாடவுள்ள ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் வெளிநாட்டு வீரர்கள் இந்தியாவுக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அணியின் நிர்வாகி மைக் ஹெசன் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் வரும் ஏப்ரல் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முதலாவது போட்டியில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டி சென்னையில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் சுழற்பந்துவீச்சாளர் அடம் ஸம்பாவுக்கு திருமணம் நடைபெறுவதால் அவர் முதல் சில போட்டிகளில் பங்கேற்கமாட்டார் என்று ஹெசன் தகவல் வெளியிட்டுள்ளார். அவர் இந்தியாவுக்கு வந்ததும் 7 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு அதன் பின்னர் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் ஏ.பி.டிவில்லியர்ஸ் வரும் 28 ஆம் திகதி இந்தியா வருவதாகவும் நியூசிலாந்தின் ஃபின் அலன், அவுஸ்திரேலியாவின் டானியல் சம்ஸ், கேன் ரிச்சர்ட்சன் போன்றவர்கள் தற்போது தங்கள் நாட்டு அணிகளுக்கான போட்டிகளில் விளையாடிக் கொண்டிருப்பதால் அவர்களது வருகையும் தாமதமாகும் என்றும் சில வீரர்களுக்கு அந்த நாட்டு கிரிக்கெட் சபைகளின் அனுமதி கிடைப்பதற்காக அவர்கள் காத்திருப்பதாகவும் அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

தற்போது இங்கிலாந்து – இந்திய அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடரில் விளையாடி வரும் தங்கள் அணி வீரர்கள், நேரடியாக அங்கிருந்துதங்கள் அந்த பயோ பபிளுக்கு வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் குடும்பத்தை சந்திக்க விரும்புபவர்கள் வெளியேறி, 7 நாள் தனிமைப்படுத்தலுக்குப் பின்னர் அணியோடு இணைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# முதல் போட்டியில் இந்தியா வெற்றி!

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 66 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களைக் குவித்தது.

ஷிகர் தவான் 98 ஓட்டங்களையும், கே.எல். ராகுல் 62 ஓட்டங்களையும், தனது அறிமுகப் போட்டியில் விளையாடிய க்ருனல் பாண்ட்யா 31 பந்துகளில் 58 ஓட்டங்களையும், விராட் கோலி 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பென் ஸ்டோக்ஸ் 3, மார்க் வூட் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய் 48 ஓட்டங்களையும் ஜொனி பெயர்ஸ்டோ 66 பந்துகளில் 98 ஓட்டங்களையும் எடுத்து சிறப்பான துவக்கத்தைத் தந்தனர். ஆயினும், மத்திய வரிசை விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து விழ, 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த இங்கிலாந்து அணி, 251 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 66 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அறிமுக வீரர் பிரசிட் கிருஸ்ணா 4 விக்கெட்டுக்களையும் சர்துல் தாக்கூர் 3, புவனேஸ்வர் குமார் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஷிகர் தவான் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



## மே.இ.தீவுகள் துடுப்பெடுத்தாடியபோது

# 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார் லக்மால்

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களான 169 க்குப் பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய மே.இ.தீவுகள் அணி, நேற்றைய நாள் நிறைவின்போது 8 விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மே.இ.தீவுகள் அணியின் ஜோஸ்வா த சில்வா 46, கைல் மேயர்ஸ் 45, ஜோன் கம்பெல் 42 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தில் ரக்கீம் கோர்ன்வால் 60, கெமர் ரோச் 4 ஓட்டங்களோடு ஆட்டமிழக்காதிருந்தனர். டெஸ்ட் போட்டிகளில் கோர்ன்வால் பெறும் முதலாவது அரைச்சதம் இதுவாகும்.

இலங்கை அணியின் சுரங்க லக்மால் சிறப்பாகப் பந்துவீசி 45 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். துஸ்மந்த சமீர 2 விக்கெட்டுக்களையும் லசித் எம்புல்தெனிய 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று இலங்கை நேரப்படி மாலை 7.30க்கு ஆரம்பமாகியது.

# அறிமுகப் போட்டியில் வேகமான அரைச்சதம் புதிய சாதனை படைத்த க்ருனல் பாண்ட்யா



இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அறிமுக வீரராகக் களமிறங்கிய க்ருனல் பாண்ட்யா 26 பந்துகளில் அரைச்சதமடித்திருந்தார். இதன் மூலமாக 21ஆம் நூற்றாண்டில் அறிமுக ஒருநாள் சர்வதேசப் போட்டியில் வேகமாக அரைச்சதம் பெற்ற வீரர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்திருக்கிறது.

இதுவரை அந்தச் சாதனை இங்கிலாந்து வீரர் லூக் ரைட் வசம் இருந்தது. 2007 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கெதிராக தனது அறிமுகப் போட்டியில் 38 பந்துகளில் அவர் அந்தச் சாதனையைப் புரிந்திருந்தார்.

இந்தச் சாதனையை க்ருனல் பாண்ட்யா முறியடித்ததோடு, இந்தியாவுக்காக ஏழாவது துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி தனது முதல் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அரைச்சதம் பெற்ற வீரர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார்.



# முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸ் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடுகின்றது இலங்கை

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் நாள் ஆட்ட முடிவில் இலங்கை அணி சிறப்பான நிலைக்கு முன்னேறியுள்ளது.

நேற்றைய மூன்றாவது நாள் ஆட்டம் நிறைவடைந்தபோது, தனது இரண்டாவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைச் சேர்த்துள்ளது.

தங்களது முதல் இன்னிங்ஸ்களுக்காக இலங்கை அணி 169 ஓட்டங்களையும் மேற்கிந்திய தீவுகள் அணி 271 ஓட்டங்களையும் பெற்றிருந்த நிலையில், இலங்கை அணி தற்போது 153 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை அணியின் இரண்டாவது இன்னிங்ஸில், ஓத பெர்னான்டோ 91 ஓட்டங்களையும் லஹிரு திரிமன்ன 76 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்திருந்தனர். தனஞ்சய டி சில்வா 46 ஓட்டங்களையும் பத்தும் நிசங்க 21 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காதுள்ளனர். கெமர் ரோச்சும் கைல் மேயர்சும் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று மாலை 7.30 க்கு ஆரம்பமாகும்.

# கடந்த ஆட்சியின் வீட்டுத் திட்டத்தால் பலர் கடனாளி ஆக்கப்பட்டு உள்ளனர்!

## வியாழேந்திரன் சாடுகின்றார்

கடந்த ஆட்சிக்காலத்தில் இரண்டரை லட்சம் ரூபா வழங்கிக் கொண்டுவரப்பட்ட வீட்டுத்திட்டத்தால் பலர் கடனாளிகளாக் கப்பட்டனர் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் 'சுபீட்சத் தின் நோக்குக்' கொள்கைப் பிரகடனத்துக் கேற்ப விரைவான கட்டுமான செலவு – செயற்திறன் கொண்ட கொங்கிறீட் பேணல் நிரந்தர வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக் கல் நடும் வேலைத் திட்டத்தின் கீழ் மட் டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பகுதி களிலும் வீடமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு மற்றும் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த வேலைத் திட்டங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

ஜனாதிபதியின் தேர்தல் கால வாக்குறு திக்கு அமைவாக அனைவருக்கும் வீடு என்ற கொள்ளைக்கு அமைவாக நாட்டைக் கட்டியெழுப்பும்' சுபீட்சத்தின் நோக்கு'



கொள்கை பிரகடனத்துக்கேற்ப விரை வான கட்டுமான செலவு – செயற்திறன் கொண்ட கொங்கிறீட் பேணல் நிரந்தர வீடமைப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் பட்டிப்பளை பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிரா மத்திலும் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாவற்காடு இறக்கத்து முனை ஆகிய கிராமங்களில் இந்த வீடு கள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந் திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், பிர தேசசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர் –

கடந்த ஆட்சிக் காலத்தில் இரண்டரை லட்சம் ரூபா வழங்கிக் கொண்டுவரப்பட்ட வீட்டுத்திட்டத்தால் பலர் கடனாளிகளாக் கப்பட்டனர். கடந்த ஆட்சிக்காலத்தில் வடக்கு, கிழக்குக்கு கிடைத்த 65 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டன.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத் தோடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலை வர்களும் இணைந்துகொண்டு அரசாங்கத் தைப் பாதுகாத்துக் கொண்டிருந்தபோது இந்த 65 ஆயிரம் வீடுகள் வந்தன. நான்கு வருடங்கள் ரணிலைப் பாதுகாத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இந்த 65 ஆயிரம் வீடுகளில் ஆறு வீடுகளை கூட கட்டவில்லையென்பது கவலைக்குரியதாகும்.

தமிழ்த் தலைவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தைப் பாதுகாத்தது மட்டுமே மிச்ச மாகும். தமிழ் மக்களுக்கான எந்த செயற் பாட்டையும் அவர்கள் மேற்கொள்ள வில்லை. கடந்த ஆட்சிக்காலம் தமிழர்க ளுக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதம்.

16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த அரசாங்கத்தில் எவ்வளவோ விட யங்களைச் செய்திருக்கமுடியும். அரசாங் கத்தையேயே ஆட்டிப்படைத்திருக்க முடியும். ஆனால் செய்யவில்லை. ரணி லைப் பாதுகாக்கும் வேலையையே அவர்கள் செய்தார்கள். – என்றார்.

## மாவனெல்லை சம்பவத்துடன் அஸாத்துக்கு தொடர்பு நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு!

மேற்கு மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் ஸாலி, மாவனெல்லையில் புத்தர் சிலைகளை இடித்த சந்தேகநபர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியுள்ளத் என குற்றப் புலனாய்வு பிரிவு, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மேலும் அவர், இலங்கை குடியரசின் இறையாண்மைக்குத் தீங்கு விளை விக்கும் வகையில் முஸ்லிம் தீவிரவாதி களுக்கு உதவியுள்ளமையும் தெரியவந் துள்ளதாகக் குற்றப் புலனாய்வு பிரிவு நீதிமன்றத்தில் அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளது.

முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி, பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் குற்ற வியல் சட்டங்களின் கீழ் குற்றப்புலனாய்வு பிரிவினரால் அண்மையில் கைது செய் யப்பட்டார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாகவே அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுவதாக குற்றப் புல னாய்வு பிரிவு அறிவித்திருந்தது.

இந்நிலையில், தற்போது, மாவனெல் லெயில் புத்தர் சிலைகளை இடித்த சந் தேக நபர்களுடன் நெருங்கிய தொடர் பைப் பேணியுள்ளனர் எனக் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு குற்றப் புல னாய்வு பிரிவு, அறிக்கையொன்றின் ஊடாகத் தெரிவித்துள்ளது.

## இரு உறுப்பினரைக் கட்சியிலிருந்து நீக்கியது ஐக்கிய தேசியக் கட்சி!

மொரவெள மற்றும் திருகோண மலை ஆகிய பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளனர் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்ராட தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளவை வருமாறு –

மேற்படி இருவரும் கட்சியின் யாப் பையும் கட்சியின் ஒழுங்கு விதிமுறைக ளையும் மீறி செயற்பட்டமை காரண மாக அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களான யாக்கூப் தம்பி ஜெனீர்தீன் மற்றும் ஆர்.எம்.எஸ்.விஜயசிங்க ஆகியோரே இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அவர்க ளுக்கு அது தொடர்பிலான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த கடிதத்தின் பிரதியொன் றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.– என அவர் குறிப்பிட்டுள்ளார்

## அடாவடிகள் தொடர்ந்தால் போராட்டங்களும் தொடரும்!

### உருத்திரபுரீசுவர் ஆலயத்தில் பல்கலை மாணவர்கள்





கிளிநொச்சி – உருத்திரபுரீஸ்வர் ஆல யத்தில் தொல்லியல் திணைக்களம் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்ளு வதற்கு எதிராக பொதுமக்களால் இரண்டாம் நாளாகக் கவனவீர்ப்பு போராட்டம் இடம் பெறுகிறது.

போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று செவ்வாய்க்கிழமை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் போன்ற குழுவினர் சென்று நேரடியாகத் தமது ஆதரவை வழங்கினர்.

அத்தோடு, தொல்பொருள் திணைக் களத்தின் அடாவடித்தனத்தை நிறுத்த வேண்டும், தமிழர் மரபுரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி சென்றுள்ளனர்.

இவ்வாறான அடாவடி நடவடிக் கைகள் தொடர்ந்தால் தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டி வரும் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் தெரிவித் துள்ளார்.

## புலிகளின் குற்றங்கள் தவறவிடப்பட்டுள்ளன ஐ.நா. பேரவையில் பாகிஸ்தான் அறிவிப்பு!

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வந்த தீர்மானத்தில் 'இலங்கை மக்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் செய்த குற் றங்களைக் கண்டிக்கத் தவறிவிட்டது' என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப் புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான ஐ.நா. தீர் மானம் மீதான வாக்கெடுப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு வாக்கெடுப் புக்கு முன்னர் உரையாற்றும் போது பாகிஸ்தானிய பிரதிநிதி இதை கூறினார்.

மேலும் இலங்கைக்கு எதிரான தீர் மானத்தை எதிர்ப்பதாகவும் அவர் குறிப் பிட்டார்.

விடுதலைப்புலிகள், ஆதரவாளர்கள் மற்றும் அதன் நிதியாளர்களின் பொறுப் புக்கூறலுக்கான அழைப்பிலிருந்து தீர் மானம் விலகியதாகக் கூறினார்.

மேலும், இலங்கை மக்களின் காயங் களைக் குணப்படுத்துவதை விட, துன் பங்களை மீண்டும் எழுப்புவதாக வரை வுத் தீர்மானம் தோன்றுகிறது என்று அவர் சுட்டிக்காட்டினர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2021 இல் வெளியிடப்பெற்றது.